தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர்

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 13-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கொத்தமல்லியின் பண்ணை விலை உயரும்; கம்பு, ராகி விலைகள் நிலையாக இருக்கும்

கொத்தமல்லி வாசனைப் பொருளாகவும், மருந்தாகவும் பயன்படுத்தப் படுகிறது. அதன் இலைகள் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் குஜராத் கொத்தமல்லி-1, குஜராத் கொத்தமல்லி-2, ஆர்.சி.ஆர் -41, யூடி-20, இராஜேந்திர சுவாதி (ஆர்டி-44), சிஎஸ் 287, கோ1, கோ2, கோ3, சாதனா, சுவாதி மற்றும் சிந்து ஆகிய இரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டில் கொத்தமல்லி 10,804 எக்டரில் பயிரிடப்பட்டு 5,049 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தூத்துக்குடியைத் தொடர்ந்து விருதுநகர், இராமநாதபுரம், திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகியன அதிக அளவில் கொத்தமல்லி பயிரிடும் முக்கிய மாவட்டங்கள் ஆகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சென்ற 12 வருடங்களாக நிலவிய கொத்தமல்லி விலை நிலவரத்தை ஆய்வு செய்ததில், அறுவடையின் போது அதாவது மார்ச் 2014 முதல் ஏப்ரல் 2014ல் ஒரு குவிண்டாலுக்கு ரூ.7000 முதல் ரூ.7500 வரை கிடைக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மே, ஜூன் 2014ல் கொத்தமல்லியின் பண்ணை விலை ரூ. 9000 – 9500 வரை உயர வாய்ப்புகள் உள்ளன. எனவே அறுவடை செய்த கொத்தமல்லியை விவசாயிகள் நல்ல முறையில் சேமித்து மே-ஜூன் 2014ல் விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகின்றனர்.

கம்பு

கம்புப் பயிர், கிராம மக்களின் குறிப்பாக மானாவாரிப் பயிர் செய்யும் மக்களின் முக்கிய உணவாக உள்ளது. இது பரவலாக வறண்ட மண்டலம் மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதியில் பயிரிடப்படுகிறது. கோடையில் தமிழ்நாடு, கர்நாடகா, பஞ்சாப் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் கம்பு நீர்ப்பாசனப் பயிராகவும் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் மே - ஜுன் மற்றும் அக்டோபர் - நவம்பர் ஆகிய இரு பருவங்களிலும் கம்பு பயிரிடப்படுகிறது. இது மழைப் பொழிவைப் பொறுத்து அக்டோபர்-நவம்பர் மாதங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. நம் மாநிலத்தில் 2011-12 ல் கம்பு 0.46 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 1.14 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. அதன் உற்பத்தித்திறன் 2453 கிலோ / எக்டர் ஆகும். விழுப்புரம் மாவட்டத்தில் கம்பு அதிக அளவில், அதாவது 29,870 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி, மதுரை, தேனி, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் கடலூர் ஆகியன கம்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பதைத் தெரிந்து கொண்டு அதன் மூலம் கம்பு விற்கலாமா அல்லது இருப்பு வைத்து விற்கலாமா என்று விவசாயிகள் ஆலோசனையில் உள்ளனர். எனவே சிறந்த முடிவுகளை விவசாயிகள் எடுக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சென்ற 12 வருடங்களாக நிலவிய கம்பு விலைகளை ஆராய்ந்தது. அறுவடை சமயத்தில் அதாவது மார்ச்-ஏப்ரல் 2014ல் பண்ணை விலை ஒரு கிலோவுக்கு ரூ.14 முதல் 15 வரை இருக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளது. விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளதால் அறுவடை செய்யப்பட்ட மற்றும் சேமித்து வைக்கப்பட்டுள்ள கம்பினை உடனடியாக விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

ராகி

ராகி இந்தியாவின் முக்கிய பாரம்பரிய சிறு தானியங்களில் ஒன்றாகும். ராகியில், நார்சத்து, புரதம் மற்றும் கனிமங்கள் அரிசி உணவைக்காட்டிலும் அதிகம்

உள்ளது. எனவே, ஆரோக்கிய உணவில் நாட்டம் கொண்டவர்கள் மத்தியில் அரிசிக்கு இணை உணவாக ராகி பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு 2.24 இலட்சம் டன்கள் ராகியை 0.83 இலட்சம் எக்டேரில் உற்பத்தி செய்து இந்தியாவில் கர்நாடகாவிற்கு அடுத்து இரண்டாமிடம் வகிக்கிறது. தமிழகத்தில் ராகியின் உற்பத்தித்திறன் எக்டேருக்கு 2716 கிலோவாகும். இது தேசிய அளவில் எக்டேருக்கு 1641 கிலோ என்ற அளவைக் காட்டிலும் மிகவும் கூடுதலாகும்.

தமிழ்நாட்டில் 2011-2012ல், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு மற்றும் வேலூர் மாவட்டங்கள் மொத்த தமிழக ராகிப் பரப்பான 0.83 இலட்சம் எக்டர் 96 சதவீதம் பங்களித்தன. ராகி அனைத்து முக்கிய மாவட்டங்களிலும் கரீப் பருவத்தில் (ஜுலை – ஆகஸ்ட்) மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது. கடந்த 30 வருடங்களில் (1981 – 2011) பரப்பு மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சிப் போக்கும் உற்பத்தித்திறனில் பெருகும் போக்கும் காணப்படுகிறது.

இச்சூழலில் தமிழக ராகி விவசாயிகள் அறுவடை செய்த ராகியை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து விற்பதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். எனவே தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 11 வருடங்களாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய ராகி விலையை ஆராய்ந்தது.

கர்நாடகாவில் ராகி உற்பத்தி, நுகர்வோரின் தேவை மற்றும் மக்காச்சோளத்தின் விலை ஆகியன ராகி விலையை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளாகும். வர்த்தக மூலங்களின் கூற்றுப்படி, தீவன உற்பத்தியில் மக்காச்சோளத்தின் விலை அதிகரிக்கும் பொழுது மாற்றாக ராகி பயன்படுத்தப்படுகிறது. தற்போது மக்காச்சோளம் விலை குவிண்டால் ரூ.1200க்கும் ராகி குவிண்டால் ரூ.1700 விற்பனையாகிறது. எனவே தீவன உற்பத்தியில் ராகியின்

தேவை குறைந்துள்ளது. நடப்பாண்டில் ராகி உற்பத்தி அளவு தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் அதிகரித்துள்ளது.

வேளாண் சந்தை பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில் ராகியின் பண்ணை விலை மார்ச் முதல் ஏப்ரல் **2014** வரை குவிண்டாலுக்கு ரூ.**1800** முதல் **1850** வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதத்திற்கு பின் விலை அதிகரிப்பதற்கான காரணிகள் குறைவு. எனவே, விவசாயிகள் சேமித்து வைத்த ராகியை உடனடியாக விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

*மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-*

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர்-**641003.***
*தொலைபேசி - **0422-2431405***

*மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-*

1. *பேராசிரியர் மற்றும் தலைவர்,*
   *வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,*
   *தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
   *கோயம்புத்தூர்-**641003.***
   *தொலைபேசி - **0422-6611284***

2. *பேராசிரியர் மற்றும் தலைவர்,*
   *சிறுதானியங்கள் துறை,*
   *தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்,*
   *தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
   *கோயம்புத்தூர்-**641003.***
   *தொலைபேசி - **0422-2450507***

மக்கள் தொடர்பு அலுவலர்